செ.வெ.எண்: 37 நாள்: 28.10.2021

# பத்திரிக்கைச் செய்தி

தென்காசி மாவட்டம், சுரண்டை காமராஜர் கலைக் கல்லூரியில் இன்று (28.10.2021) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி மூலம் ரூ.1.93 இலட்சம் மதிப்பில் கூடுதலாக கட்டப்பட்ட 6 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வக கட்டிடங்களை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கோபால சுந்தர ராஜ்,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி வைத்து இனிப்புகளை வழங்கினார்கள்.

இக்கட்டிடம் மாணவ மாணவியர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.தனுஷ் எம்.குமார் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் (தென்காசி) திரு.பழனிநாடார் அவர்கள், தென்காசி வருவாய் கோட்டாட்சியர் திரு.ராமசந்திரன், செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) தொழில் நுட்ப கல்வி கோட்டம் திரு.வெ.ப.சத்தியவாதிஷ்வரன் அவர்கள், உதவி பொறியாளர் திரு.ந.நல்லாசிங் அவர்கள், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி.சு.தமிழ்ச்செல்வி அவர்கள், மாவட்ட செயலாளர் (தெற்கு) திரு.பொ.சிவபத்மநாதன் அவர்கள், கொடையாளர் திரு.தங்கையா நாடார் அவர்கள், கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி.ஜெயா, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.